**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.41/2021**
**Prosecution Witnesses: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டியம்மாள் | Caste | : |
| Father Name/ Husband Name | : பால்ராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(20.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் குருவப்பநாயக்கன்ப்பட்டி பேரையூர் தாலுகாவில் குடியிருந்து வந்தேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் பூபதிராஜா எனது கணவர் ஆவார். புஷ்பா எனது மூத்த நாத்தனார், முருகேஸ்வரி எனது இளைய நாத்தனார். காளியப்பன் என்பவர் புஷ்பாவின் கணவர் ஆவார். கடந்த 2007 வது வருடம் தை மாதம் 10ம் தேதி பேரையூர் முருகன் கோவிலில் வைத்து எனக்கும் 1வது எதிரி பூபதிராஜாவுக்கும் பெரியோர்களால் நிச்சயக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு 20 பவுன் தங்க நகையும், ரூபாய். 2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பண்டபாத்திர பொருட்களுக்கு, 50,000/- ரொக்கமாகவும் மாப்பிள்ளைக்கு 2 பவுன் தங்க செயினும் போட்டார்கள். திருமணம் முடிந்து எனது கணவர் வீட்டாருடன் கீழதிருமாணிக்கம் என்ற ஊரில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தேன். திருமணத்தின் வாயிலாக எனக்கு ராஜபாண்டி மற்றும் உக்கிரபாண்டி ஆகிய இருமகன்கள் பிறந்தார்கள். 2 பிள்ளைகளுக்கும் சேர்த்து 2016 வது வருடம் காதுகுத்து வைத்தோம். அதற்கு எனது அப்பா 4 பவுன் தங்க செயினும், எனது

தம்பி 1 லட்சம் பணமும் கொடுத்தார்கள். அதன் பிறகு 25 பவுன் நகையும், 3 லட்சம் ரூபாயும், மீண்டும் எனது பெற்றோர்களிடமும் வாங்கி வருமாறு எனது நாத்தனார்கள் முருகேஷ்வரி மற்றும் புஷ்பம் ஆகியோர்கள் கொடுமை செய்தார்கள். எனது கணவர் பூபதிராஜா மற்றும் காளியப்பன் ஆகியோர்கள் என்னை மேற்கண்ட 3 லட்ச ரூபாய் பணமும், 25 பவுன் நகையும் எனது பெற்றோர்களிடம் வாங்கி வருமாறு கொடுமை செய்தார்கள். நான் எனது பெற்றோர்களிடம் சொன்னதற்கு என் என்னை சமாதானம் செய்து மீண்டும் எனது கணவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். நீ மேற்கண்ட நகையும் பணமும் வாங்கிவரவில்லை என்றால் ஜெயராணி என்பவரை எனது கணவர் பூபதிராஜாவுக்கு திருமணம் செய்து வைத்துவிடுவோம் என என்னை மிரட்டி 25 ரூபாய் பத்திரத்தில் கையெழுத்து போடுமாறு மிரட்டினார்கள். எனது கணவர் என்னை சிணுக்கோலியால் இடது கையில் குத்தியும், அடித்தும் கொடுமைப்படுத்தியுள்ளார். (சாட்சி இடது கையில் உள்ள காயத்தழும்பை காண்பிக்கிறார்). எனது கணவர் வீட்டிற்கு அடிக்கடி லேட்டாக வருவதும் அதை கேட்டால் அசிங்க அசிங்கமாக திட்டியும் என்னை கொடுமைப்படுத்தினார். எனது மூத்த நாத்தனார் புஷ்பம் வாரத்திற்கு ஒரு முறை எங்கள் வீட்டிற்கு வந்து எனக்கும் எனது கணவருக்கும் சண்டை இழுத்துவிடுவார். எனது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் கொடுமை தாங்கமுடியால் நான் எனது 2 மகன்களுடன் 2016 வது வருடம் எனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதன் பிறகு நான் ஒரு நாள் நானாக எனது கணவர் வீட்டிற்கு சென்ற போது எனது மாமனார் பாண்டி என்னை அரிவாளால் வெட்ட வந்தார். எனது பெற்றோர்கள் எனது திருமணத்திற்காக போட்ட 20 பவுன் நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் மற்றும் மாப்பிள்ளைக்கு போட்ட 2 பவுன் நகைகளும் எனது கணவரிடம் தான் உள்ளது. அவர்கள் அதை எடுத்து தரவில்லை. எனவே நான் 2017 வது வருடம் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. நான் கூலி வேலை செய்து தான் எனது மகன்கனை வளர்த்து வருகிறேன். ஒரு மகனுக்கு 8 வயதும் ,

இளையவனுக்கும் 6 வயதிலும் எனது வீட்டை சென்று சென்றார். இப்போது அவர்களுக்கு வயது 16 மற்றும் 17 ஆகிறது. இதுவரை அவர்களுக்கு எந்தவொரு செலவும் எனது கணவர் செய்யவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.41/2021**
**Prosecution Witnesses: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : பால்ராஜ் | Caste | : |
| Father Name/ Husband Name | : ராமசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(20.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் குருவப்பநாயக்கன்ப்பட்டி பேரையூர் தாலுகாவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகள் பூபதிராஜா எனது மகளின் கணவர் ஆவார். புஷ்பா மற்றும் முருகேஷ்வரி ஆகியோர்கள் எனது மகளின் நாத்தனார் ஆவார்கள். மற்றொரு காளியப்பன் புஷ்பாவின் கணவர் ஆவார். மற்றொரு எதிரி பாண்டி என்பவர் மகளின் மாமனார் ஆவார். ஜெயராணி என்பவர் எனது மருமகன் பூபதிராஜா என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வரும் பெண்ணாவார். அவருடன் சேர்ந்து கொண்டு தான் 1வது எதிரி எனது மகள் அ.சா.1 ஐ விரட்டிவிட்டார். அ.சா.1க்கும் 1 வது எதிரிக்கும் 2007 வது வருடம் தை மாதம் 10 ம் தேதி பேரையூல் முருகன் கோவிலில் வைத்து பெற்றோர்கள் பார்த்து திருமணம் செய்து வைத்தோம். திருமணத்திற்காக 20 பவுன் தங்க நகையும், மாப்பிள்ளைக்கு 2 பவுன் செயினும், 1 பவுன் மோதிரமும், திருமண செலவுக்காக ரூ.50,000/- கொடுத்தோம். திருமணம் முடிந்து எனது மகள் எதிரிகள் வீட்டில் கூட்டுக்குடும்பாக வாழ்ந்து வந்தார். எனது ராஜபாண்டி

மற்றும் உக்கிரபாண்டி என்ற இரண்டு பேரன்கள் பிறந்தார். ஜெயராணி என்பவருடன் எனது மருமகன் 1வது எதிரி சேர்ந்து வாழ்ந்து கொண்டு எனது மகளை அடித்து துன்புறுத்தி நேரம் காலம் சரியல்லை என சொல்லி உங்கள் வீட்டிற்கு சென்று பிரிந்து இரு என சொல்லி எனது மகள் அ.சா.1ஐ எனது பேரன்களுடன் எங்களது வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். எதிரிகள் பாண்டி, புஷ்பா, காளியப்பன், முருகேஷ்வரி ஆகியோர்கள் சேர்ந்து ஜெயராணியையும் எனது மருமகன் பூபதிராஜாவையும் கேரளாவிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். மேற்படி சம்பவம் 2017 வது வருடம் நடைபெற்றது. எனது மருமகனை பற்றி விசாரித்த போது அவர்கள் எங்கு சென்றார்கள் என எங்களுக்கு தெரியாது என்று எதிரிகள் கூறினார்கள். எனது மகள் எதிரிகள் வீட்டிற்கு சென்றுஅவரது கணவரை பற்றி விசாரித்ததற்கு நீ எங்கள் வீட்டிற்கு வரக்கூடாது எனது மகன் எங்கு சென்றார் என தெரியாது என சொல்லி எனது மகளை முடியை பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். 1வது எதிரியை எனது மகள் விவாகரத்து செய்ய வேண்டும் என 20 ரூபாய் பத்திரத்தில் கையெழுத்து கேட்டு மிரட்டியுள்ளார்கள். எனது மகள் கையெழுத்து போடாமல் எனது வீட்டிற்கு வந்துவிட்டார். எனவே நாங்கள் 2017 வது வருடம் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.41/2021**
**Prosecution Witnesses: 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : லட்சுமி | Caste | : |
| Father Name/ Husband Name | : பால்ராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(20.11.2025)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் குருவப்பநாயக்கன்ப்பட்டி பேரையூர் தாலுகாவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகள் பூபதிராஜா எனது மகளின் கணவர் ஆவார். புஷ்பா மற்றும் முருகேஷ்வரி ஆகியோர்கள் எனது மகளின் நாத்தனார் ஆவார்கள். மற்றொரு எதிரி காளியப்பன் புஷ்பாவின் கணவர் ஆவார். மற்றொரு எதிரி பாண்டி என்பவர் மகளின் மாமனார் ஆவார். ஜெயராணி என்பவர் எனது மருமகன் பூபதிராஜா என்பவருடன் சேர்ந்து வாழ்ந்து வரும் பெண்ணாவார். அவருடன் சேர்ந்து கொண்டு தான் 1வது எதிரி எனது மகள் அ.சா.1 ஐ விரட்டிவிட்டார். அ.சா.1க்கும் 1 வது எதிரிக்கும் 2007 வது வருடம் தை மாதம் 10 ம் தேதி பேரையூல் முருகன் கோவிலில் வைத்து பெற்றோர்கள் பார்த்து திருமணம் செய்து வைத்தோம். திருமணத்திற்காக 20 பவுன் தங்க நகையும், மாப்பிள்ளைக்கு 2 பவுன் செயினும், 1 பவுன் மோதிரமும், திருமண செலவுக்காக ரூ.50,000/-ம் கொடுத்தோம். திருமணம் முடிந்து எனது மகள் எதிரிகள் வீடான திருமாணிக்கத்தில் கூட்டுக்குடும்பாக வாழ்ந்து வந்தார்.

ராஜபாண்டி மற்றும் உக்கிரபாண்டி என்ற இரண்டு பேரன்கள் பிறந்தார். எனது மருமகனுக்கும் மகளுக்கும் அடிக்கடி சண்டை நடந்துகொண்டிருந்தது. நாங்கள் எனது மகளிடம் தான் அறிவுரை சொல்லி சண்டை நடக்காமல் இருக்க சொன்னோம். ஆனால் எனது மருமகன் எனது மகளையும் எனது பேரன்களையும் எங்களது வீட்டில் விட்டு விட்டு சென்றுவிட்டார். எனது பேரன்களுக்கு 5 மற்றும் 3 வயதில் விட்டு விட்டு சென்றார். அப்போதிலிருந்து நாங்கள் தான் அவர்களை பார்த்து கொள்கிறோம். எனது மருமகன் ஊரில் இல்லாமல் இருந்தார். அவர் எங்கு சென்றார் என்ற விபரம் தெரியாததாலும் நாங்கள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரையில் மனு தாக்கல் செய்தோம். அப்போது எதிரி மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி 1வது எதிரி எனது மகளுடன் சேர்ந்து வாழ்வதாக உறுதியளித்தார். ஆனால் அதன் பிறகு அவர் என்ன செய்தார் என்று தெரியவில்லை. எனது மகள் இதுசம்பந்தமாக திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை